1974 சனவரி 21]

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, இந்த கொல்விமலைத் திட்டத்திற்கு ஏற்கனவே இந்த அரசாங்கம் நம்முடைய வரவு செலவுத் திட்டத்தில் தொகை ஒதுக்கியிருக்கிறது என்று நினைக்கிறேன். மத்திய அரசின் முன் அனுமதி பெறாமல் இந்த அரசாங்கம் எப்படி தொகையை ஒதுக்கியது? இவ்வளவு நாள் காலதாமதம் ஆவதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, தொகை ஒதுக்குவதற்கும், மத்திய அரசின் அனுமதிக்கும் சம்பந்தம் இல்லை. வேலை துவங்குவதற்கு முன் மத்திய அரசின் அனுமதி வாங்க வேண்டுமென்று இருக்கிறது. மத்திய அரசின் அனுமதிக்காக காத்திருக்கிறோமே தவிர வேறல்ல.

இராசனேரி நீர்த்தேக்கத் திட்டம்

*44 வினா—**திரு. கா. வேழவேந்தன்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கும்முடிபூண்டித் துணை வட்டத்தில் தேர்வாய் கிராம எல்லையில் அமையும் 'இராசனேரி மதகு நீர்த்தேக்க அணைத் திட்டம்' எப்போது முடிவடையும்?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: செங்கற்பட்டு மாவட்டம் கும்முடிபூண்டி துணை வட்டத்தில் மண் கொண்டத்திற்கு பதில் ஓர் அணைக்கட்டு ரூ. 2,20,000 செலவில் கட்டும் திட்டத்திற்கு மாவட்ட ஆட்சியாளரின் ஒப்புதல் வழங்கப்பட்டு மேற்பார்வை பொறி யாளரின் ஆய்வில் உள்ளது.

திரு. கா. வேழவேந்தன்: தலைவரவர்களே, இந்த 'இராசனேரி மதகு நீர்த்தேக்க அணைத்திட்டம்' நீண்ட நாட்களாக ஆய்வில் உள்ளது, அது எப்பொழுது முடிவடையும்?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, ஆய்வு முடிந்தவுடன் முடிவடையும்.